சிறப்பிதழ்
**Special Issue**

*Chief Editor*
*Dr. M. Sadik Batcha*

*Advisory Editor*
*Dr. N. Chandra Segaran*

*Editorial Board*
*Dr. M.A.M. Rameez*
*Dr. Jeyaraman*
*Dr. A. Ekambaram*
*Dr. G. Stephen*
*Dr. S. Chitra*
*Dr. S.Senthamizh Pavai*
*Dr. A. Shunmughom Pillai*
*Dr. P. Jeyakrishnan*
*Dr. Seetha Lakshmi*
*Dr. S. Easwaran*
*Dr. Kumara Selva*
*Dr. Ganesan Ambedkar*
*Dr. Krishanan*
*Dr. Kumar*
*Dr. S. Kalpana*
*Dr. T. Vishnukumaran*
*Dr M. N. Rajesh*
*Dr. Govindaraj*
*Dr. Uma Devi*
*Dr. Senthil Prakash*
*Dr. Pon. Kathiresan*
*Dr. S. Vignesh Ananth*
*Dr.M. Arunachalam*
*Dr. S. Bharathi Prakash*

௨௦ மாசி ௨௦௫௨
04th March 2021
ISSN : 2321 - 984X

# நவீனத் தமிழாய்வு

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் ஆய்விதழ்)

*Journal of*

# Modern Thamizh Research

*(A Quarterly International Multilateral Thamizh Journal)*

Arts and Humanities (all), Language
Literature and Literary Theory, Tamil
UGC Care Listed (Group-I) Journal

சிறப்பிதழ் : பன்னாட்டுக் கருத்தரங்கம் - 2021
தமிழ்த்துறை,
ந.க.ம. கல்லூரி,
பொள்ளாச்சி, தமிழ்நாடு, இந்தியா

## தமிழ் இலக்கியத்தில் ஆளுமை

சிறப்பிதழ் ஆசிரியர்
**Special Issue Editor**

**முனைவர் ம. சித்ரகலா**
உதவிப்பேராசிரியர்

*Published by*
**RAJA PUBLICATIONS**
10, (Upstair), Ibrahim Nagar, Khajamalai,
Tiruchirappalli - 620 023, Thamizh Nadu, India.
Mobile : +91-9600535241
website : rajapublications.com

13 பகுதி-2
Part -2

| | | | |
|---|---|---|---|
| 55. | வ.மோகனப்பிரியா | சிவனும் சக்தியும் - தேவாங்க புராணம் சார்ந்து சில குறிப்புகள் | 240-242 |
| 56. | ப.லெட்சுமி | அடியார்க்குநல்லாரின் படைப்பாளுமை | 243-245 |
| 57. | மு.ரா. சித்ரா தேவி | அகநானூற்றில் தோழியின் ஆளுமை | 246-249 |
| 58. | மு.கவிதாதேவி | திருக்குறள் கூறும் நீர்மேலாண்மையில் அறிவியல் ஆளுமை | 250-254 |
| 59. | செ.சண்முகவடிவு<br>சு.பிரசாத் | திருக்குறளில் தனிமனித ஆளுமை மேம்பாடு | 255-260 |
| 60. | க. கோமதி | செவ்வியல் இலக்கியங்களில் மனிதமேம்பாடு | 261-265 |
| 61. | T. ராதிகா | கவிஞர் தமிழ்க்குழவி படைப்புகளில் ஆளுமை திறன் | 266-268 |
| 62. | இரா.விஷ்ணுப்பிரியா | தனிமனித வெற்றிக்கு வள்ளுவரின் ஆளுமைக்கூறுகள் | 269-273 |
| 63. | க. ராஜ்குமார் | நெடுநல்வாடையில் ஆளுமையும் ஆளுமை சிதைவும் | 274-277 |
| 64. | வெ.முருகேஸ்வரி | சூல் புதினத்தில் ஆளுமை குறித்த பதிவுகள் | 278-281 |
| 65. | க.தனலட்சுமி | விழுமியங்களும் ஆளுமைகளும் | 282-286 |
| 66. | அ.நித்யா | பாலைத்திணைப் பாடல்களில் தோழியின் ஆளுமைத்திறன் | 287-290 |
| 67. | கா. திருநாவுக்கரசு<br>செ.விஸ்வநாதன் | திருக்குறள் நெறியில் ஆளுமைத்திறன் மேம்பாடு | 291-295 |
| 68. | செ. மாணிக்கராஜ்<br>இரா. பிரான்சிஸ் சேவியர் | முல்லைப்பாட்டில் புதைந்துள்ள தனி மனித ஆளுமைகள் | 296-299 |
| 69. | ரா.பிறாக்ஸி | திருக்குறளில் மனித ஆளுமை | 300-304 |
| 70. | மு. மகாலெட்சுமி | சொரிமுத்தையனார் கோவில் வரலாறும் மனித ஆளுமையும் | 305-308 |
| 71. | சு.இராமதிலகம் | இறையன்புவின் படைப்பாளுமை | 309-312 |
| 72. | பெ.தவசி | திருக்குறள் உணர்த்தும் ஆளுமை | 313-316 |
| 73. | எம்.மெஹ்முதா | விருந்தோம்பலில் அன்பின் ஆளுமை | 317-319 |
| 74. | த.பத்மா | அம்பை சிறுகதையில் பெண்ணின் ஆளுமை | 320-324 |
| 75. | க.ஷகிலாலோகநாயகி | திருமூலரின் இலக்கியத்தில் மனிதனின் ஆளுமை | 325-328 |
| 76. | ந. பிரகாஷ் | கொங்கு நாட்டு வள்ளல்கள் | 329-334 |
| 77. | அமுதா அன்பழகன் | புலம்பெயர்நாட்டுத் தமிழ் மொழிக் கல்வியில் பாரதியார் பாடல்கள் | 335-340 |
| 78. | கி.நாகரத்தினம் | அறநூல்கள் வழிநட்பில்நெறிப்படுத்துவதன் இன்றியமையாமை | 341-345 |
| 79. | பா.பேபி ஷாலினி | கம்பராமாயணத்தில் குகனின் ஆளுமை | 346-350 |
| 80. | சு.பரணி | கற்றாழை நாவலில் மணிமேகலையின் ஆளுமை | 351-356 |
| 81. | ம.கீதா | தமிழ் இலக்கியத்தில் மனிதநேயம் | 357-360 |
| 82. | செ. செல்லபாண்டி | கொ.மா.கோதண்டம் நாவலில் குறிஞ்ஞாம் பூ நாவல் பெண்ணிய ஆளுமை | 361-363 |
| 83. | கா.கவிதா | புலம்பெயர் நாவலில் ஆளுமைப் பண்புகள் | 364-367 |
| 84. | ர. பாலதாரணி<br>க.தனலட்சுமி | ஆண்டாள் பிரியதர்ஷினி சிறுகதைகளில் கருத்தாளுமை | 368-373 |
| 85. | ஆ.சந்திரசேகர் | தாழ் உடைத்து(அ)லட்சியமாக நடக்கும் நதி | 374-377 |
| 86. | பா.அருள்ஜோதி | சுந்தரர் பாடல்களில் ஆளுமை | 378-382 |
| 87. | குமாரசாமி தயாளினி | முத்தமிழ் ஆளுமை பிரம்மஶ்ரீ மா.த.ந வீரமணிஐயர் | 383-386 |
| 88. | க.சுந்தரமூர்த்தி | கம்பனின் படைப்பாளுமை | 387-389 |
| 89. | த. பரமேஸ்வரி | நாலடியார் நவிலும் வாழ்வியல் ஆளுமைகள் | 390-394 |
| 90. | உ.மணிமேகலை | மலைபடுகடாமில் ஆளுமை | 395-397 |
| 91. | இரா.சங்கீதா | கம்பராமாயணத்தில் திருக்குறளின் ஆளுமை | 398-402 |
| 92. | ம.இராஜகோபால் | தமிழ்மகன் புதினங்களில் ஆளுமைக் கூறுகள் | 403-407 |
| 93. | ரா.சிவக்குமார்<br>C.விஸ்வநாதன் | வேதாத்திரியத்தில் ஆளுமைத்திறன் | 408-410 |
| 94. | ப.கார்த்திக் | திருமூலரின் நெறி ஆளுமை | 411-413 |
| 95. | மு.சுகந்தி | உயிர் எழுத்து இதழின் - ஆளுமை வெளிப்பாடும் படைப்பாளர்களுக்கான ஆளுமை சுதந்திரமும் | 414-419 |
| 96. | இரா.ஜெயந்தி | சங்க இலக்கியத்தில் முருக வழிபாட்டின் ஆளுமை | 420-424 |
| 97. | பா. விக்னேஷ்குமார் | பாரதியாரின் ஆளுமை | 425-427 |
| 98. | R. எழில்ராமன் | நாட்டுபுற இசை மரபில் வாழ்வியல் மாற்றங்கள் | 428-430 |
| 99. | பொ. பிரியா | அம்ருதா இதழ்ச் சிறுகதைகளில் காணலாகும் உத்திகள் | 431-435 |
| 100. | ப.பத்மா<br>காசிபட்டா சத்தியமூர்த்தி | ஆண்டாளின் பக்தி ஆளுமை | 436-442 |
| 101. | கா. மகேசுவரி | தமிழ் இலக்கியங்களில் பெண்பாற் புலவர்களின் ஆளுமை திறன் | 443-445 |
| 102. | கோ. சரண்யா | கவிஞர் மீராவின் படைப்பாளுமை | 446-447 |
| 103. | து. யோககலைவாணி | பிரபஞ்சனின் சிறுகதைகளில் படைப்பாளுமை | 488-451 |
| 104. | த. திலகவதி | சாருநிவேதிதாவின் ஸீரோ டிகிரி நாவலின் அவந்திகாவின் ஆளுமை | 452-455 |
| 105. | ம.காயத்ரி | அகநானூற்று மருதத்திணைப் பாடல்களில் ஆளுமை வெளிபாடு | 456-458 |
| 106. | கி. புவனேஸ்வரி | வாயிலில் தோழியின் ஆளுமை | 459-462 |
| 107. | ஆ. ஜோதி | ஐங்குறுநூற்றில் தோழியின் ஆளுமைப்பண்பு | 463-466 |
| 108. | ம. சித்ரகலா | கம்பனின் படைப்பாளுமையில் வீடணனின் பண்பாளுமை | 467-471 |


Published by : **Raja Publications,** No. 10, Upstair, Ibrahim Nagar, Khajamalai, Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Mobile : 9600535241
Printed : **The Printing House,** Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Ph : +91 - 431-2420121

# கம்பனின் படைப்பாளுமையில் வீடணனின் பண்பாளுமை

முனைவர் ம. சித்ரகலா
உதவிப்பேராசிரியர்,
ந.க.ம. கல்லூரி, பொள்ளாச்சி.

**ஆய்வுச் சுருக்கம்**

கம்பனின் படைப்பாளுமையில் வீடணனின் பண்பாளுமை என்ற தலைப்பிலான ஆய்வுக் கட்டுரையில் முன்னுரை ஆளுமை, கம்பனின் படைப்பாளுமைத்திறன், வீடணனின் பண்பாளுமை, சிந்தனைத் திறனைத் தூண்டும் ஆளுமைத்திறன், இராவணன் வெறுப்பும், வீடணன் அன்பும், தெளிவான முடிவெடுக்கும் பண்பு, உறவாழுமை ஆகிய துணைத் தலைப்புகளில் இக்கட்டுரை ஆராயப்பட்டுள்ளது. கட்டுரையின் நிறைவாக ஆய்வில் கண்ட முடிவை தொகுப்புரையாக வழங்கப்பட்டுள்ளது.

**முன்னுரை**

படைப்பாளன் என்பவன் சமுதாயத்தையும் சமூக நிகழ்வுகளையும் படம் பிடித்துக்காட்டுபவன் அல்ல. அவன் தன்னுடையப் படைப்பில் தான் சொல்ல வந்த இலக்கை அடைகிறானா? இவன் படைப்பால் சமுதாயம் சீர்பெற்றதா? இப்படைப்பினால் யாருக்கு என்ன பயன்? தான் சொல்ல வந்த கருத்தைச் சொல்லும் போது சமுதாயச் சீர்குலைவு ஏற்படுமா? சமுதாயப் பண்பாட்டிற்கு நலம் பயக்கும்படி அமைந்துள்ளதா? இப்படைப்பு மரபுவழியை மாற்றியதா? முக்காலத்துக்கும் பொருந்துமா? என பலவழிகளை ஆராய்ந்து செய்யப்படும் படைப்பு காலத்தால் அழியாது நிலைப்பெறும். அவ்வகையில் கம்பன் தனது படைப்பானக் கம்பராமாயணத்தில் மனித பண்பும், பண்பாடும் மாறாமலும், ஒழுக்கநிலை சீர்குலைவால் ஏற்படும் அழிவையும், பிறன்மனை நயத்தல் நாசம் தரும் என்பதையும் தன் படைப்பில் ஆணித்தரமாக சீர்தூக்கிக் காட்டியதோடு, பாத்திரப் படைப்பின் பண்பை வெளிப்படுத்துவதிலும் மிகுந்த அக்கறை காட்டியுள்ளார். அவ்வகையில் அரக்கர் குடியில் பிறந்த வீடணனின் பண்பையும், தன் சகோதரன் உறவு நிலை காம மயக்கத்தால் அழிவதைத் தாங்காமல் அறிவுரை கூறி நன்னிலை பெற விரும்பி பாடுபட்டதையும், அன்பே உருவான இராமனிடம் அடைக்கலம் புகுந்த நிலைப்பாடுகளையும் கம்பனின் படைப்பாளுமையின் வழி நின்று ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**ஆளுமை**

ஆளுமை என்ற தமிழ்ச்சொல் Personality என்ற ஆங்கிலச் சொல்லால் குறிப்பிடப்படுகிறது. ஆளுமை என்பது ஒருவரின் உணர்வுகளின் வெளிப்பாடே எனலாம். இதனை வாழ்வியற்களஞ்சியம் "ஆளுமை – தனிமனிதனுடைய எண்ணங்கள் செயற்படும்முறை நடத்தைகள், பிறருடன்பழகும் முறை மனப்பான்மைகள் வாழ்க்கைத்தத்துவம், அறிவாற்றல், உணர்ச்சிகள் ஆகியயாவும் சேர்ந்த தொகுப்பிலிருந்து அவனுக்கு ஏற்படும் தனித்தன்மை ஆளுமை எனப்படும். அவனுடைய உடற்தோற்றம், உடைப்பாணி, அன்பு, பொறாமை, ஊக்கம், அச்சம், இரக்கம், நன்றியுணர்வு, தந்திரம் போன்ற பலவிதமான பண்புகளும் அவனுடைய ஆளுமையில் அடங்கும்" (வாழ்வியற்களஞ்சியம், தொகுதி II ப. 679) என்று விளக்கம் தருகிறது. இத்தன்மையுள்ள ஆளுமைப்பண்பு ஒவ்வொரு மனிதரிடமும் வேறுபடும் தன்மையுடையதாகின்றது. அவ்வேறுபாடே சமுதாயத்தில் மறுமலர்ச்சிக்கும், ஏற்றதாழ்விற்கும் உறுதுணையாகின்றது என்பதை கம்பனின் படைப்பில்வழி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**கம்பனின் படைப்பாளுமைத்திறன்**

பாத்திரப் படைப்பில் தன்னிகரற்ற தனித்திறனுடையவன் கம்பன். தான் படைத்த எந்த ஒரு பாத்திரத்தையும் அவற்றுக்கே உரிய நீதி நியாயங்களோடு உயிரோடவிட்டு அப்படைப்பு ஒவ்வொன்றையும் நிறைவுடையதாக்குவதில் வல்லமை படைத்தவன் கம்பன். கம்பனின் இப்பெருமையைப் பாரதியார்,

**யாமறிந்தபுலவரிலேகம்பனைப் போல்,**
**வள்ளுவர்போல் இளங்கோவைப்போல்**
**பூமிதனில் யாங்கணுமேபிறந்ததில்லை.**
**உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை.**
(பாரதியாரின் தேசியகீதங்கள் பா. 22)

என்று பாடியுள்ளார். அவ்வகையில் கம்பர் தனது கம்பராமாயணத்தில் இராமன் என்ற காவியத்தலைவனின் பாத்திரமானாலும் சரி ஒரே காட்சியில் வந்து ஒரே ஒரு வார்த்தைப் பேசி விட்டுமறையும் சீதையின் தோழி நீலமாலையானாலும் சரி, இரண்டு படைப்பிற்குமே கம்பனின் செயல்திறன் ஒன்றே. கோபுரத்தை உண்டாக்குவதில் காட்டும் அதே கலைத்திறனைக் கோபுரத்தில் ஏங்கோ தெரியும் சிறு சிற்பத்திற்குள்ளும் காட்டும் ஆளுமைப்பண்பு உடையவன் கம்பன். அவ்வகையில் வீடணனின் பண்பாளுமையை வெளிக்காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**வீடணனின் பண்பாளுமை**

**கள்ளிவயிற்று இன் அகில் பிறக்கும்ளூ**
**மான் வயிற்றுஒள் அரிதாரம் பிறக்கும்ளூ**
**பெருங்கடலுள்**
**பல் விலையமுத்தம் பிறக்கும்ளூ அறிவார்**
**யார்,**
**நல் ஆள் பிறக்கும் குடி?**
(நான்மணி. பா. 4)

என்றார் விளம்பிநாகனார். அவரின் சொல்லிற்கிணங்கஎக்குடியில் நல்லவர் உள்ளனர் என்றோஎக்குடியில் தீயவர் உள்ளனர் என்றோகுடிப்பிறப்பைவைத்துஒருரின் பண்புநலனைக் கூற முடியாதுஎன்பதையும் எக்குடியில் பிறந்தாலும் நற்பண்பு என்பது மாறாதது என்பதை,

**அடினும் ஆவின்பால் தன் சுவைகுன்றாது**
**சுடினும் செம்பொன் தன் ஒளிகெடாது**
**அரைக்கினும் சந்தனம் தன் மணம் அறாது**
**புகைக்கினும் காரகில் பொல்லாங்குகமழாது**
**கலக்கினும் தக் கடல் சேறுஆகாது**

என்று வெற்றிவேற்கையில் அதிவீரராம பாண்டியரும், இதே கருத்தை ஒளவையாரும் வாக்குண்டாம் என்ற பாடலில்,

**அட்டாலும் பால் சுவைகுன்றாது**
**அளவளாய்**

எனக் குறிப்பிட்டுள்ளார். மேலும் உலகப் புகழ்பெற்ற காப்பிய இலக்கியங்களை உற்றுநோக்குங்கால் சிலப்பதிகார காப்பியத்தில் கணிகையர் குடியில் பிறந்த மாதவி கற்புக்கரசியாகத் திகழ்ந்ததையும், மாதவியின் மகள் மணிமேகலை துறவறம் கொண்டதையும் ஆராயும் போது எக்குடியிலும் நல்லவர் தீயவர் பிறப்பு அமையலாம் என்பது புலனாகின்றது. இதேபோல, ஆளைப்பார்த்து இடைபோடுவதும், அழகைப்பார்த்து மதிப்பிடுவதும் தவறு என்பதைக் கம்பராமாயணம் எடுத்தியம்புகின்றது.

அவ்வகையில் இராவணனின் இளைய தம்பி வீடணன். அரக்கர் குடியில் பிறந்தவன். இருப்பினும் நன்மை, தீமைகளையும், நீதிமுறைகளையும், பிறரின் வலிமையையும் ஆராய்ந்து பார்க்கும் தன்மையுடையவனாக விளங்குகிறான். இவன் இராவணன் சீதையைக் கவர்ந்து வந்த செயலைத் தவறு எனப் பலவாறு பணிந்தும், எச்சரித்தும், இச்செயலால் அரக்கர் குலம் அழியப் போவதையும் கூறுகிறான். வீடணன் இராவணனின் அறமற்ற செயலைத் தடுக்க நினைப்பதோடு இராவணனுக்கு கடைக்க இருக்கிற தேவேந்திரனுக்குரிய பெரிய சுபபோகப்

பதவியாகிய எல்லா உலகங்களையும் ஆள்கின்ற அந்த அரசப் பதவியை இழந்து விடுவான் இராவணன் என்ற கவலையில்,

"எந்தையும் நீரு யாயும் நீரு எம்முன் நீரு தவ
வந்தனைத் தெய்வம் நீரு மற்றும் முற்றும் நீரு
'இந்திரப் பெரும் பதம் இழக்கின்றாய்' என நொந்தனென் ஆதலில் நுவல்வது ஆயினேன்

(கம்ப.யுத்தகாண்டம். 6143)

என்று கூறுகிறான். ஆக வீடணன் தனது அண்ணனை வீழ்த்தி தான் அந்த அரியணையை ஏற வேண்டும் என்று எண்ணவில்லை. பதவி ஆசை கொள்ளவில்லை. உடன் பிறந்தவனையும் அவனின் பதவியையும், அவனுக்கு வரப்போகும் அழிவையும் எண்ணி வறுத்தமுற்று எனக்கு எல்லாமே நீ என வருந்தி கூறிகிறான். அறிவு அழிந்து இருப்பவன் அன்பில் கூறினால் ஏற்றுக்கொள்வான் என எண்ணி அவனின் சிந்தனையைத் தூண்டுகிறான்.

மேலும் ஆசையே துன்பத்திற்குக் காரணம் ஆசையை நீக்கினால் துன்பமின்றி வாழலாம் என்ற புத்தனின் வாக்கைப்போல வீடணன் உலகத்தில் ஒருவனுக்கு ஏற்படும் உயர்வுக்கும் தாழ்விற்கும் காரணம் அவனுடைய மண்ணாசையும் பெண்ணாசையுமே என்று கூறுகிறான். அதோடுமட்டுமல்லாமல் இராவணன் பெண்ணாசையால் பிறன்மனை நயந்தது முறையற்ற செயல், இச்செயல் அவனுக்கு கேடு விளைவிக்கும் என்பதை வள்ளுவ பெருந்தகை,

நட்டார்குறை முடியார்நன் றாற்றார் நன்னுதலாள்
பெட்டாங்கு ஒழுகு பவர் (குறள். 908)

என்ற வழிகளை எடுத்தியம்புவதுபோல அழிவு நேரும் என்று அச்சுறுத்தும் பண்பினாகவும் விளங்குகிறான்.

மேலும் தனது சகோதரனான இராவணனைக் காப்பாற்ற பலவாறு முயல்கிறான் இச்செயல் நமக்கு சாபம் என்று கூறியதோடு, இராமனின் வில்லின் திறத்தைக் கூறியதோடு அந்த அம்புகள் தீமை விளைவிக்கும் உயிரைக் கொல்லும் என்பதை.

"ஆவம்ஆம் அரிய புற்று உறைவரு
முற்று அறிவருக்கு அழிவு செய்யும்
பாவ காரியர் உயிர்ப் பதம் அலாது.
இரை பெற – பகழி நாகம்

(கம்ப.யுத்தகாண்டம். 6158)

எடுத்தியம்புகிறான் வீடணன். இவ்வாறு இராவணனின் அழிவைத் தடுக்க பலவாறு பணிந்தும், எச்சரித்தும், முயற்சிக்கிறான் பண்பாளனாக திகழ்கிறான் வீடணன்.

## சிந்தனைத் திறனைத் தூண்டும் ஆளுமைத்திறன்

அன்பு அறிவு இரண்டும் முரண்பாடு உடையது. அறிவுக்குத் தெரியும் தவறுகள் அன்பு மிகுதியால் மறைக்கப்படும். அன்பு அறிவின் கண்ணைக் கட்டிவிடும் என்று சொல்லலாம். பாச மிகுதியால் நம்மவர் செய்வது சரியே என்ற விவாதத்தைக் கொண்டு வருவதோடு அவருக்காகக் கூரை ஏறிக்கூட சண்டையிட தயங்கமாட்டார்கள். இவ்வகையில் இராவணனின் மகன் இந்திரஜித் நற்பண்பாளன். அவனுக்குப் பிறர்மனை நயத்தல் தவறு என்பது தெரியும். இருப்பினும் தன் தந்தை இராவணனின் செயலைக் கண்டிக்காமல் தந்தைக்காக இராமபிரானிடம் போர் செய்யபுறப்படுகிறான். அதனைக் கண்டித்த வீடணன்,

நுலினால் நுணங்கியஅறிவுநோக்கினை
போலுமால்!உறுபொருள் புகலும் பூட்சியோய்,

(பா. 6219)

என்று இந்திரசித் இராமபிரானிடம் போருக்குச் செல்லக்கூடாது. இது தவறான செயல். தவற்றைச் செய்கிறவர்களை விட அதனை ஊக்குவித்தல்

என்பது சரியான வழிமுறையல்ல என்பதை ஆழமாக உணர்த்துகின்ற பண்புடையவனாக வீடணன் திகழ்ந்த பாங்கு குறிப்பிடத்தக்கது.

**இராவணன் வெறுப்பும், வீடணன் அன்பும்**

இராவணனின் அழிவைத்தடுக்க முயன்ற வீடணனை பார்த்து இராவணன் கொன்று விடுவேன் ஊரார் சகோதரனைக் கொன்று விட்டான் என்ற பழிச்சொல்லை எண்ணி உன்னை விடுகிறேன் என்று வெறுத்து ஒதுக்கிப்பேசியதோடு இவ்விடத்தை விட்டு ஓடிவிடு என்றும் விரட்டுகிறான். முறையற்ற காமத்தால் அறிவிழந்தவன் உயிரிழந்துவிடக் கூடாது என்று,

**வாழியாய் கேட்பினால் வாழ்வு கைம்மிக**
**ஊழி காண்குறும் நினது உயிரை ஓர்கிலாய்**
(கம்ப. யுத்த.பா. 6457)

என்றும் பிற உயிர்களுக்காக இறங்கும் தன்மையை,

**புத்திரர் குருக்கள் நன் பொருஇல்**
**கேண்மையர் மித்திரர், அடைந்துளோர்,**
**மெலியர் வன்மையோர், இத்தனை**
**பேரையும், இராமன் வெஞ்சதம்**
**சித்திரவதை செய்யக் கண்டு தீர்தியோ?**
(கம்ப. யுத்த.பா. 6458)

பாடல்வரிகள் அனைத்து உயிர்களும் உன்செயலால் அழியப்போகிறது என்ற மனவலியையும் உணர்த்தி நிற்கிறான் வீடணன்.

மேலும் நல்லவனுக்கு அழகு தீயாரை விட்டு விலகுதல் என்ற முடிவோடு, பல அறிவுரை சொல்லியும் இராவணன் மாறாத நிலைக் கண்டு, நான் ஏதேனும் தவறு செய்தால் மன்னிக்கவும் என்று உலக உத்தமன் வீடணன் கூறி நிற்பதை,

**எத்துணை வகையினும் உறுதி எய்தின**
**ஒத்தன, உணர்த்தினேன், உணரசிற்றிலை**
**அத்த! என் பிழை பொறுத்தருள்வாய்"**
**என உத்தமன் அந்நகர் ஒழியப் போயினான்**
(கம்ப. யுத்த.பா. 6459)

பாடல்வரிகள் எடுத்தியம்புகின்றன. இவ்வாறு வீடணன் சகோதரன் வெறுப்பு காண்பித்தாலும் தான் சகோதரனுக்காக அன்பை மட்டுமே பொழியும் பண்புடையவனாகவும், பிற உயிர்களுக்காக இரங்கும் தன்மையுடையவானாகவும் விளங்கிய தன்மை ஈங்கு புலனாகின்றது.

**தெளிவான முடிவெடுக்கும் பண்பு**

வீடணன் இலங்கையை விட்டு வெளியே வருகிறான். வானரப் படைகளைப் பார்த்து வியக்கிறான். அவசரத்தில் எடுக்கும் எந்த ஒரு முடிவும் ஆபத்தை விளைவிக்கும், தெளிவு பெறாது என்ற சிந்தனையுடைய வீடணன் தன் அமைச்சர்களின் ஆலோசனைப்படி இராமனை அடைக்கலம் புக வருகிறான். வரும் நேரம் இரவு. புதியவரைக் காண இந்த நேரம் உகந்தது அல்ல. அது மரபுவழி பட்டதும் அல்ல. உலக இயல்பும் அல்ல என்பதை உணர்ந்த வீடணன். பகலவன் வந்தவுடன் வந்து இராமனைக் காண வருகிறான். ஒரு இலக்கை அடைய முற்படும்போது ஐயம் இருக்க கூடாது தெளிவு மட்டுமே இருக்க வேண்டும் என்பதை உணர்ந்தவனான வீடணன் வானரப்படைகளின் அருகில் செல்கிறான். இராமன் ஏற்றுக் கொள்வானோ, மாட்டானோ என எண்ணாமல் இராமன் பக்கமே செல்லும் வீடணனின் செயலை உற்று நோக்குங்கால் அவனின் தெளிந்த செயல்பாடு புலப்படும்.

**உறவாழுமை**

உயர்குடியில் பிறந்தவர்கள் தன்னையும் தன்னுடைய இனத்தாரையும் மட்டும் உயர்ந்தவராகக் கருதாது அனைத்து உயிர்களையும் தம் உயிர்ப்போல கருதுவது சிறப்பு. அத்தன்மை மனிதர்களிடம் உள்ள ஏற்றதாழ்வு மனப்பான்மையைப் போக்கவல்லது. சாதி, சமயம், உயர்ந்தவர், தாழ்ந்தவர், பணக்காரர், ஏழை, என்றும் இவை அ∴றிணை உயிர்கள் என்றும் இறைப்படைப்பை முழுவதும் வேறுபடுத்திப் பார்ப்பவன் மனிதன். அப்படைப்புக்கள்

அனைத்துக்கும் உயிரும் உணர்வும் உள்ளது என அவற்றை அன்பால் அணைப்பவர் இறைத்தன்மையுடையவர்கள்.

அன்பால் ஒன்றுபடுத்தலாம் என்ற படைப்பாளுமையை உலகமக்களுக்குத் தெளிவுபடுத்திக் காட்டியவர் கம்பர். கம்பர் தனது இராமாயணக் காவியத் தலைவனான இராமனை உறவின் மேன்மையை உலகுக்கு காட்டும் உன்னத பாத்திரமாகப் படைத்துள்ளார். தன்மீது அன்பு கொண்ட வரை மட்டுமல்லாமல் தன்னிடம் அடைக்கலம் வேண்டி வருபவர் யாராக இருந்தாலும் அன்பு செலுத்துவதோடு உறவாக ஏற்றுக் கொள்ளும் பாங்கை,

குகனொடும் ஐவர் ஆனேம்
முன்புளு பின், குன்று சூழ்வான்
மகனொடும்,அறுவர் ஆனேம்ளு
எம்முழைஅன்பின் வந்த
அகன் அமர் காதல் ஐய!
நின்னொடும் எழுவர் ஆனேம்
புகலரும் கானம் தந்து,
புதல்வரால் பொலிறந்தான் நுந்தை,
(கம்ப. 6507)

என்று கம்பரின் பாடல்வரிகள் எடுத்தியம்புகின்றன. இவ்வாறு அன்பு நீங்காத சுற்றமே சிறந்த செல்வம் என்பதை,

விருப்பறாச் சுற்றம் இறையின் அருப்பறா
ஆக்கம் பலவும் தரும் (குறள். 522)

என்று திருவள்ளுவரும் அன்புறவின் மேன்மையைச் சிறப்பித்துள்ளார். இவ்வாறு ஏற்றதாழ்வு பார்க்காத அன்புறவின் மேன்மையை உலக மக்களுக்குக் கம்பர் தனது படைப்பாளுமைத் திறத்தால் எடுத்தியம்பும் பாங்கு ஆராயத்தக்கது.

## தொகுப்புரை

கம்பனின் படைப்பாளுமையில் வீடணனின் பண்பு நலன் ஆராயப்பட்டது. வீடணன் சகோதர பாசம் மிக்கவனாகவும், அதே சமயம் நடுவுநிலை தவறாதவனாகவும், சகோதரனே என்றாலும் தவறு செய்தல் கூடாது என்ற எண்ணம் உடையவனாகவும், மண்ணாசை அற்றவனாகவும், முறையற்ற பெண்ணாசை அழிவு தரும் என்பதை உணர்ந்தவனாகவும், பாவ புண்ணியம், நன்மை தீமை, பிறரின் பலம், தன்நிலை அறிதல், அன்பு மிகுதியால் மதிமயங்கி தவறு செய்யக்கூடாது, பிற உயிரையும் தம் உயிர்போல் இரங்கல் வேண்டும், தன் செயல் பிறரை பாதிக்க கூடாது என்ற சிறந்த எண்ணம் உடையவனாக கம்பனால் சித்தரிக்கப்பட்ட பாத்திரம் வீடணன்.

ஆக எக்குடி பிறப்பினும் உயர் செயலும் நல் எண்ணம் கொண்டவர் உள்ளனர் என்றும் அவர்களை இவ்வுலகம் போற்றும் என்பதும் அதற்கு அரக்கர் குடி பிறந்த வீடணன் விதிவிலக்கல்ல என்பதும் புலனாகின்றது. இவ்வாறே அரக்கர் குடி பிறந்த பிரகலாதன் திருமாலின் அன்புக்குரியவான இருந்தான் என்பது ஈங்கு நினைவு கூறத்தக்கது. ஆகவே பண்படையவரை அவ்வுலகம் போற்றும் என்பது திண்ணம்.

## துணை நின்ற நூல்கள்.


1. கம்பராமாயணம்
2. திருக்குறள்
3. வெற்றி வேட்கை
4. நான்மணிக்கடிகை
5. கொன்றை வேந்தன்
6. பாரதியார் பாடல்கள்
7. வாழ்வியற்களஞ்சியம் தொகுதி II


❑❑❑